**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆம் நாள் திங்கள்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 14/2024</u>**

<u>CNR NO.TNTU09-001389-2024</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் துணைக் கண்காணிப்பாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம், குற்ற எண். 83/2023 |
| 2. | எதிரி | சந்தோஷ், த/பெ.வெங்கடேசன் |
| 3. | குற்றம் | இ.த.ச. பிரிவுகள் 279, 304(A). |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 28.02.2023 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 28.02.2023 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | 28.02.2023 – 01.03.2023 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 13.03.2024 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 22.05.2024 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | – |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1–அ.சா.2 – 25.06.2024<br>அ.சா.3 – 16.08.2024<br>அ.சா.4, அ.சா.5 – 08.05.2025<br>அ.சா.6 – அ.சா.10 – 09.06.2025<br>அ.சா.11 – அ.சா.18 – 11.07.2025<br>அ.சா.19 – அ.சா.22 – 20.08.2025 |

| | | |
|---|---|---|
| | | அ.சா.23 – அ.சா.25 – 03.09.2025<br>அ.சா.26 – 16.06.2026<br>அ.சா.27 – 02.07.2026<br>அ.சா.28 – 07.07.2026 |
| 11 | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 10.07.2026 |
| 12 | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 10.08.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் துணைக் கண்காணிப்பாளர்,வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம்.

எதிரி : சந்தோஷ், த/பெ.வெங்கடேசன்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 279, 304(A).

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 279, 304(A) குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரி பெயர் | தந்தை பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | சந்தோஷ் | வெங்கடேசன் | இந்து | மாணவர் | ரத்தின கவுண்டர் நகர், கே.கே.நகர், வேலூர் | 23 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 28.02.23 | 28.02.23 | 28.02.23 | 01.03.23 | 22.05.24 | 10.07.26 | 10.08.26 | – |

இவ்வழக்கானது 29.02.2024 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 10.07.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.செந்தில் குமார், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**<u>தீர்ப்புரை</u>**

**<u>1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>**

இவ்வழக்கில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட ஆம்பூர் – வாணியம்பாடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வளையாம்பட்டு சாமி & கோ லெதர் டேனரி கம்பெனி எதிரில் சர்வீஸ் ரோட்டில் கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.45 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன மூன்று நபர்கள் பள்ளிக்கு போக விஜய் என்பவர் சைக்கிளை ஓட்டுக்கொண்டு பின்னால் அவருடைய தம்பி சூர்யா என்பவரை உட்கார வைத்துக்கொண்டும், ரபீக் என்பவர் மற்றொரு சைக்கிளை ஓட்டிக்கொண்டு பள்ளிக்கு சென்று கொண்டிருந்தபோது ஆம்பூர் மார்கமிருந்து வந்த வாணியம்பாடி நோக்கி வந்த KA 03 AF 0194 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா TUV 300 என்ற காரை அதன் ஓட்டுநரான எதிரி சந்தோஷ் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் இடது புறம் இருந்த தடுப்பு சுவரில் மோதி கிரிசமுத்திரம் – வளையாம்பட்டு சர்வீஸ் ரோட்டில் பள்ளிக்கு சைக்கிளில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விஜய் என்பவர் மீதும் ரபீக்

என்பவர் ஓட்டி வந்த சைக்கிளில் மோதி விபத்து ஏற்படுத்தி அந்த விபத்தில் மூன்று பள்ளி மாணவர்கள் தூக்கி எறியப்பட்டதில் விஜய் என்பவருக்கு வலது பக்க தாடை, மூக்கு வாயில் ரத்த காயமும், தலையில் பலத்த ரத்த காயமும், சூர்யாவுக்க தலை மற்றும் இடது கால்ட முட்டி ஆகிய இடங்களில் காயமும், ரபீக் என்பவருக்கு தலையின் முன்பக்கம் மற்றும் இடது பக்க கை, இடது பக்க தாடை ஆகிய இடங்களில் பலத்த ரத்த காயம் ஏற்படுத்தி மூவருக்கும் சம்பவயிடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) (3 Count)–கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திரம் வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) (3 Count) – ன்கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரி ஆஜரானதும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு..ச 207–ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும், எதிரி மீதான குற்ற செயல்கள் விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) (3 Count) – ன் கீழான குற்றத்தின் சாராம்சத்தை விளக்கி கூற வினவியபோது, எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.28** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.12** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

5(i) அ.சா.1 ராஜி இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் இவ்வழக்கில் இறப்புற்ற விஜய் மற்றும் சூரியா ஆகியோரின் தந்தை ஆவார். கடந்த 28.02.2023ம் தேதி மாலை 08.45 மணிக்கு வளையாம்பட்டிலிருந்து கிரிசமுத்திரத்திலுள்ள பள்ளிக்கு அ.சா.1ன் மகன்கள் ஒரு சைக்கிளிலும், அவரது மகன்களின் நண்பர் ரபீக் மற்றொரு சைக்கிளிலும் வளையாம்பட்டிலிருந்து கிரிசமுத்திரத்திலுள்ள பள்ளிக்கு சென்றபோது கிரிசமுத்திரம் சாமி அண்ட் கோ அருகே சிவப்பு நிற மகேந்திரா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக ராஜா தொலைபேசி வாயிலாக தகவல் சொன்னதின்பேரில் தகவல் தெரிந்து சுமார் 20 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு சென்றபோது சம்பவ இடத்திலேயே மூவரும் இறந்திருந்ததாகவும், விபத்து சம்மந்தமாக அ.சா.1 ராஜி வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கு சென்று நிலைய பொறுப்பில் இருந்த அ.சா.26 திரு.அருண்குமார், காவல் ஆய்வாளரிடம் அ.சா.ஆ.1 புகார்மனு கொடுத்துள்ளார்.

5(ii) பின்பு அ.சா.26 திரு.அருண்குமார், காவல் ஆய்வாளர் அ.சா.1 கொடுத்த அ.சா.ஆ.1 புகார் மனுவிற்கேற்ப நிலைய குற்ற எண் 83/2023 இ.த.ச பிரிவுகள் 279, 304(A) (3 Count) –ன் கீழ் அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, இவ்வழக்கில் மூன்று சிறார்கள் இறப்புற்றதால் வழக்கின் புலன்விசாரணை அதிகாரி வாணியம்பாடி காவல் துணை கண்காணிப்பாளர் என்பதால் வழக்கு கோப்பினை அ.சா.27 திரு. நிலவழகன், காவல் துணை கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்துள்ளார். அ.சா.27 திரு. நிலவழகன், காவல் துணை கண்காணிப்பாளர் வழக்கு கோப்பினை 28.02.2023ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு காலை 09.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் குமார் மற்றும் அ.சா.18 பாஸ்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர், அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின் சாட்சிகள் அ.சா.1 ராஜி, அ.சா.18 பாஸ்கர் மற்றும் குமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(iii) பின் அ.சா.27 திரு. நிலவழகன், காவல் துணை கண்காணிப்பாளர் இவ்வழக்கில் சூர்யா, விஜய், ரபீக் மூன்று சிறுவர்கள் மரணம் அடைந்ததால் வாணியம்பாடி உட்கோட்ட

காவல் கண்காணிப்பாளர் அலுவலக ந.க. எண்.15/DSP/VNB/PG/2023, தேதி: 28.02.2023 கண்ட செயல்முறைப்படி விஜய் என்பவரின் பிரேதத்தின் மீது வாணியம்பாடி கிராமிய காவல் ஆய்வாளர் அருண்குமார் அவர்களையும், ரபீக் என்பவரின் பிரேதத்தின் மீது வாணியம்பாடி நகர காவல் ஆய்வாளர் நாகராஜன் அவர்களையும் பிரேத விசாரணை மேற்கொள்ள உத்தரவு வழங்கியதாகவும், அ.சா.27 திரு. நிலவழகன், காவல் துணை கண்காணிப்பாளர் வாணியம்பாடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த சிறுவன் சூர்யா என்பவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து அ.சா.ஆ.11 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அ.சா.1 ராஜி என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் பிரேத விசாரணை சாட்சிகள் அ.சா.13 மேரி, அ.சா.14 சதீஷ், இன்பரசன், அஜித்குமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சூர்யா என்பவரின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு தலைமை காவலர் 250 அ.சா.24 திரு. சரவணன் என்பவர் மூலம் சடல கூராய்வு செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

5(iv). பின் அ.சா.25 திரு. நாகராஜன், காவல் ஆய்வாளர் வாணியம்பாடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த சிறுவன் ரபீக் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து அ.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். ரபீக் என்பவரின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு முதல் நிலை காவலர் 435 திரு. மனோகரன் என்பவர் மூலம் சடல கூராய்வு செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

5(v). பின் அ.சா.26 திரு. அருண்குமார், காவல் ஆய்வாளர் வாணியம்பாடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்கப்பட்டிருந்த சிறுவன் விஜய் என்பவர் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டு பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள்

முன்னிலையில் விசாரித்து அ.சா.ஆ.9 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். விஜய் என்பவரின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு தலைமைக் காவலர் 294 அ.சா.23 திரு.மூர்த்தி என்பவர் மூலம் சடல கூறாய்வு செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

5(vi). பின் கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 ராஜா, அ.சா.3 சரவணன், அ.சா.28 ராஜ்குமார் ஆகியோரையும், எதிரி சந்தோஷ் என்பவர் ஓட்டி வந்த காரில் பயணம் செய்து வந்து காரில் இருந்த அ.சா.4 இளவரசன், அ.சா.5 ராகுல், அ.சா.11 அரவிந்த், அ.சா.12 கௌதமன் ஆகியோர்களையும் விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(iv) பின் 28.02.2023ம் தேதி 16.00 மணிக்கு வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து எதிரி சந்தோஷ் தானாக முன்வந்து ஒப்புக்கொண்டு கொடுத்த அ.சா.ஆ.6 ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அ.சா.21 விக்ரம், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அ.சா.22 சுமதி, கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 11.01.2024-ம் தேதி வழக்கில் இறப்புற்ற சந்திரன் என்பவரின் பிரேதத்தை சடல கூறாய்வு செய்த மருத்துவர் திரு.தன்வீர் அகமதுவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.6 சடல கூறாய்வு அறிக்கையை பெற்றுள்ளார். பின் 03.03.2023ம் தேதி இறந்துபோன சூர்யா, விஜய் ஆகியோரின் பிரேதத்தை கூறாய்வு செய்த மருத்துவர் திருமதி. சத்தியபாக்கியலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 சடலக்கூராய்வு அறிக்கைகளை பெற்றுள்ளார். பின் அதே நாள் ரபீக் என்பவரின் பிரேதத்தை கூறாய்வு செய்த அ.சா.19 மருத்துவர் திரு.கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.3 சடலக்கூராய்வு அறிக்கையை பெற்றுள்ளார். பின்னர் தலைமை காவலர் 250 அ.சா.24 திரு. சரவணன், முதல் நிலை காவலர் 435 திரு. மனோகரன், தலைமைக் காவலர் 294 அ.சா.23 திரு.மூர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(vii). பின்னர் இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனம் KA 03 AF 0194 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா TUV 300 வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.வெங்கட்ராகவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.12 மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். பின்னர் அ.சா.26 திரு.அருண்குமார், காவல் ஆய்வாளர், அ.சா.25 திரு. நாகராஜன், காவல் ஆய்வாளர், இவ்வழக்கில் அ.சா.27 திரு. நிலவழகன், காவல் துணை கண்காணிப்பாளருடன் தட்டச்சு செய்த முதல் நிலை பெண் காவலர் திருமதி.துளசி ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A) (3 Count) ன் கீழ் எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

7. அரசு தரப்பு வழக்கானது கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.45 மணிக்கு ஆம்பூர் – வாணியம்பாடி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள வளையாம்பட்டு சாமி & கோ லெதர் டேனரி கம்பெனி எதிரில் சர்வீஸ் ரோட்டில் பள்ளிக்கு போக விஜய் என்பவர் சைக்கிளை ஓட்டுக்கொண்டு பின்னால் அவருடைய தம்பி சூர்யா என்பவரை உட்கார வைத்துக்கொண்டும், ரபீக் என்பவர் மற்றொரு சைக்கிளை ஓட்டிக்கொண்டு பள்ளிக்கு சென்று கொண்டிருந்தபோது ஆம்பூர் மார்கமிருந்து வந்த வாணியம்பாடி நோக்கி வந்த

KA 03 AF 0194 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா TUV 300 என்ற காரை அதன் ஓட்டுநரான எதிரி சந்தோஷ் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த கார் கட்டுப்பாட்டை இழந்து சாலையின் இடது புறம் இருந்த தடுப்பு சுவரில் மோதி கிரிசமுத்திரம் – வளையாம்பட்டு சர்வீஸ் ரோட்டில் பள்ளிக்கு சைக்கிளில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த விஜய் என்பவர் மீதும் ரபீக் என்பவர் ஓட்டி வந்த சைக்கிளில் மோதி விபத்து ஏற்படுத்தி அந்த விபத்தில் மூன்று பள்ளி மாணவர்கள் தூக்கி எறியப்பட்டதில் விஜய் என்பவருக்கு வலது பக்க தாடை, மூக்கு வாயில் ரத்த காயமும், தலையில் பலத்த ரத்த காயமும், சூர்யாவுக்க தலை மற்றும் இடது கால்ட முட்டி ஆகிய இடங்களில் காயமும், ரபீக் என்பவருக்கு தலையின் முன்பக்கம் மற்றும் இடது பக்க கை, இடது பக்க தாடை ஆகிய இடங்களில் பலத்த ரத்த காயம் ஏற்படுத்தி மூவருக்கும் சம்பவயிடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சிகளை ஒட்டுமொத்தமாக பரிசீலனை செய்கையில், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரியே ஓட்டிச்சென்றார் என்பதையும், எதிரி அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டியதன் காரணமாகவே விபத்து ஏற்பட்டு சூரியா, விஜய் மற்றும் ரபீக் ஆகிய மூன்று மாணவர்கள் உயிரிழந்தனர் என்பதையும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கவில்லை என்பதால் எதிரிக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்ய வேண்டுமென்று வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

9. அரசு தரப்பில் இறப்புற்ற ரபீக் பிரேதத்தின் மீது உடல் கூராய்வு செய்த மருத்துவர் திரு.கணேசன் என்பவரை விசாரித்து பெற்ற அ.சா.ஆ.3 சடல கூறாய்வு அறிக்கையையும், ரபீக் பிரேதத்தின் மீது உடல் கூராய்வு செய்த மருத்துவர் திரு.கணேசன் என்பவரை விசாரித்து பெற்ற அ.சா.ஆ.3 சடல கூறாய்வு அறிக்கையையும் பரிசீலனை செய்கையில், அவர்களுக்கு விபத்தினால் ஏற்பட்ட

பலதரப்பட்ட காயங்களினால் இறந்திருக்கக்கூடும் என்பது தெரியவருகிறது. மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனங்களின் ஆய்வறிக்கை அ.சா.ஆ.12 பரிசீலனை செய்கையில், விபத்தானது வாகனத்தின் எவ்வித இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்பது தெரியவருகிறது. இந்த சூழ்நிலையில் விபத்தானது யாருடைய கவனக்குறைவு அல்லது தகாத துணிச்சலால் விபத்து ஏற்பட்டு இறந்துள்ளார் என்பதனை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது.

10. இவ்வழக்கின் புகார்தாரரான ராஜி அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 ராஜி தனது நீதிமன்ற விசாரணையின்போது, " விபத்தில் இறப்புற்ற விஜய், சூரியா எனது மகன்கள், ரபீக் எனது மகன்களின் நண்பர் ஆவார். 28.02.2023ம் தேதி 08.45 மணியளவில் வளையாம்பட்டிலிருந்து கிரிசமுத்திரத்திலுள்ள பள்ளிக்கு எனது மகன்கள் ஒரு சைக்கிளிலும், ரபீக் மற்றொரு சைக்கிளிலும் சென்றபோது கிரிசமுத்திரம் சாமி அண்ட் கோ அருகே விபத்து ஏற்பட்டது. சிவப்பு நிற மகேந்திரா கார் மோதி விபத்து ஏற்பட்டதாக ராஜா என்பவர் தொலைபேசி வாயிலாக எனக்கு தகவல் சொன்னார். தகவல் தெரிந்து சுமார் 20 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்க சென்றேன். அங்கு சென்றபோது எனது 2வது மகனுக்கு தலையில் அடிப்பட்டடிருந்தது. எனது மற்றொரு மகனுக்கு இடது கால், முகம் ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. ரபிக் என்ற சிறுவனுக்கு தோள்பட்டை, தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. சம்பவ இடத்திலேயே மூவரும் இறந்து இருந்தார்கள். அவர்களது உடல்களை ஆம்புலன்ஸ் மூலமாக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றேன். கார் இடித்து எனது பிள்ளைகள் இறந்து விட்டதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள். இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது விபத்து யாருடைய தவறினால், எந்த தவறினால் ஏற்பட்டது என எனக்கு தெரியாது என்றும், அந்த காரை யார் ஓட்டி வந்தார், அதில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்பதை குறித்து எனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ராஜா தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 28.02.2023ம் தேதி 08.45 மணியளவில் வேலூரிலிருந்து வாணியம்பாடி நோக்கி வந்த கர்நாடகா பதிவெண் கொண்ட வாகனம் 03 AF 0194 என்ற மகேந்திரா வேன் பைபாஸ் சாலையில் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து தடுப்பு சுவரை தாண்டி வலது பக்க சர்வீஸ் சாலையில் வந்து கொண்டிருந்த சூரியா, விஜய், ரபீக் ஆகியோர் மீது சாமி அண்ட் கோ தொழிற்சாலை அருகே மோதியதில் மூன்று நபர்களும் தூக்கி வீசப்பட்டு கை, கால், முகங்களில் காயங்கள் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். இறப்புற்ற சூரியா, விஜயின் தந்தையான ராஜிக்கு மட்டும் தகவல் கூறினேன். விபத்தை ஏற்படுத்திய காரை யார் ஓட்டி வந்தார்கள் என்பதை நான் பதட்டத்தில் கவனிக்கவில்லை. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது வாகனம் அதிவேகமாக வந்தது என்பதனை எதை வைத்து கூறுகிறேன் என்றால் வாகனம் தடுப்பு சுவரை மீறி சர்வீஸ் சாலைக்கு சென்று விபத்தை ஏற்படுத்தியதால் வாகனம் வேகமாக வந்தது என கூறினேன் என்றும், வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என தெரியுமா என்றால் தெரியாது என்றும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்றால் 2 ஆண் நபர்கள் பயணித்திருந்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

12. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 சரவணனள் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 28.02.2023ம் தேதி காலை 08.00லிருந்து 09.00 மணிக்குள் நான் வேலைக்கு போய் கொண்டிருந்தபோது எனக்கு முன்னால் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் ஒரு சைக்கிளில் ஒருவரும், மற்றொரு சைக்கிளில் இருவரும் என 3 பேர்கள் வளையாம்பட்டிலிருந்து கிருஷ்ணகிரி சர்வீஸ் ரோட்டில் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஆம்பூரிலிருந்து பெங்களூர் செல்லும் சாலையில் வந்த கார் சர்வீஸ்ரோட்டிற்கு போடப்பட்டிருந்த தடுப்புச்சுவரைத் தாண்டி சைக்கிளில் சென்று கொண்டிருந்த மாணவர்களை இடித்து விட்டு பாலத்தை தாண்டி கார் மரத்தின் மேல் மோதியது. கார் இடித்த மாணவர்கள் சர்வீஸ் ரோட்டிலேயே விழுந்து விட்டார்கள். அவர்கள் மூவரும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்கள். என்ன கார் என்றால்

ரெட் கலர் கார், மகேந்திரா கம்பெனி கார், அதன் பதிவெண் எனக்கு தெரியாது. அதனை யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் காரை ஓட்டி வந்த டிரைவர் தான். அவர் வேகமாக காரை ஓட்டி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது கார் எவ்வளவு வேகத்தில் வந்திருக்கும் என்றால் சுமார் 120 கிலோ மீட்டர் வேகத்தில் வந்திருக்கும் என்றும், அந்த காரில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், பொதுவாக 09.00 மணிக்கு பள்ளி ஆரம்பமாகும் என்றால் சரிதான் என்றும், அந்த நேரத்தில் பள்ளி மாணவர்கள் சாலையில் வேகமாக போவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான் என்றும், விபத்து எந்த தவறினால் நடைபெற்றது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான் என்றும், அவ்வாறு நான் நேரடியாக பார்த்திருந்தால் விபத்துக்குள்ளான காரை யார் ஓட்டினார்கள் என்றும், அந்த காரில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்றும் எனக்கு தெரியும் என்றாலும், நேரில் பார்க்காததால் தான் இந்த விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல, விபத்தை சற்று தொலைவிலிருந்து பார்த்தேன், பிறகு சம்பவ இடத்திற்கு சென்று விபத்தில் சிக்கிய மாணவர்களை பார்த்து விட்டு அவர்களின் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவித்தேன். இறந்த மாணவர்களை பார்த்ததால் காரில் இருந்தவர்களை நான் கவனிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

13. இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.28 ராஜ்குமார் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 28.02.2023 ம் தேதி காலை 08.45 மணிக்கு சாமி அன் கோ கம்பெனியில் நான் வாட்ச்மேனாக இருந்ததால் பணிக்கு வருபவர்களின் நேரத்தை குறித்துக்கொண்டிருந்தேன். வழக்கம் போல் அந்த வழியாக சைக்கிளில் செல்லும் பள்ளி மாணவர்கள் எனக்கு டாடா காண்பித்து செல்வார்கள், அன்றைய தினமும் ஒரு சைக்களில் அண்ணன் தம்பி இருவரும், மற்றொரு சைக்கிளில் முஸ்லீம் மாணவர் ஒருவரும் வளையாம்பட்டில் இருந்து கிரிசமுத்திரத்தில் உள்ள பள்ளிக்கு சென்றார்கள். ஜீப்போல் உள்ள சிகப்பு நிற கார் ஒன்று ஆம்பூரில் இருந்து

வாணியம்பாடிக்கு செல்லும் மெயின் ரோட்டில் மிக வேகமாக வந்தது. சிறுவர்கள் வலது புறம் உள்ள சர்வீஸ்ரோட்டில் சைக்கிளில் வந்துக்கொண்டு இருந்தார்கள். அந்த கார் சாலையின் நடுவே இருந்த தடுப்பு சுவரில் மோதி சர்வீஸ் ரோட்டில் வந்த பிள்ளைகளின் மீது மோதியது. மோதியதில் சைக்கிளில் சென்ற மூவரும் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்கள். மூன்று சிறுவர்களுக்கும் கை, கால் , தலையில் பலமாக அடிப்பட்டது. அப்போது அங்கிருந்த நபர்கள் வந்து பார்த்தார்கள். அந்த சமயத்தில் அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர், அவர் பார்ப்பதற்கு சற்று குண்டாக இருந்தார். அங்கிருந்த நபர்கள் அந்த ஓட்டுநரை பிடித்து அடித்தார்கள், அவரை விசாரித்ததில் அவர் வேலூரில் இருந்து வந்ததாகவும் அவர் பெயர் சந்தோஷ் எனவும் கூறினார். அவரை தற்போது பார்த்தால் என்னால் காட்ட இயலும் (எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.). அந்த விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு எண் நினைவில்லை. பிறகு ஆம்புலன்ஸ் வந்து சிறுவர்களை ஏற்றி சென்றது. அன்றைய தினமே மாலை போலிசார் வந்து கம்பெனியில் வந்து என்னை விசாரித்தார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது அந்த வாகனம் இடித்து நின்றபோது ஓட்டுநர் இருக்கையில் இருந்து இறங்கிய நபரை பார்த்தேன் என்றும், ஓட்டிநரின் பக்கத்து சீட்டில் இருந்து நபர்கூட ஓட்டுநர் இருக்கையில் இருந்து இறங்கலாம் என்றால் சரிதான் என்றும், அந்த வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் பெண்கள் இரண்டு பேர், ஆண்கள் மூன்று பேர் என்றும், வாகனத்தை ஓட்டி வரும் போது யார் அந்த வாகனத்தை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்றாலும் வாகனம் நின்ற போது தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான் என்றும், விபத்து நடந்த சத்தத்தை கேட்டுதான் நான் சம்பவயிடத்திற்கு சென்றேன் என்றால் இல்லை, லோடு ஏற்றவந்த வண்டிக்காக நுழைவு வாயிலை திறப்பதற்காக நின்றுக்கொண்டிருக்கும் போது தான் அந்த வண்டி வந்து மோதியது என்றும், இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளளேனா என்றால் சொல்லியுள்ளேன் என்றும், அதுப்போன்ற சங்கதி என் வாக்குமூலத்தில் இல்லை என்றாலும் நான் தற்போது மிகைபடுத்தி சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல என்றும், 08.30 மணி என்பது வளையாம்பட்டில்

இருந்து கிரிசமுத்திரம் பள்ளிக்கு செல்ல சரியான நேரம் என்றாலும் 08.45 மணி என்பது தாமதமான நேரம் என்றாலும் சரிதான் என்றும், அதனால் அவர்கள் வேகமாக செல்ல வாய்ப்புள்ளது என்றால் சரிதான் என்றும், அந்த விபத்து எதனால் யாரால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

14. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய எதிரியுடன் பயணித்த நபரான அ.சா.4 இளவரசன் தனது சாட்சியத்தில் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சந்தோஷ், நான், ராகுல், கௌதம், அரவிந்த் ஆகிய ஐவரும் ஏலகிரி செல்வதற்காக காரில் வேலூரிலிருந்து சென்றோம். அன்று அதிகாலையில் எழுந்ததால் அசதியில் நான் காரில் தூங்கி விட்டேன். சத்தம் கேட்டு காரில் இருந்து வெளியே வந்து பார்த்தபோது வளையாம்பட்டு என போர்டில் எழுதியிருந்தது. கார் ரோட்டை விட்டு வெளியே வந்து விபத்து ஆகியிருந்தது. காரில் பயணித்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. காரை ஓட்டிய ஓட்டுநரை பார்க்க அவரை காணவில்லை. எனக்கு காலில் அடிப்பட்டது. எதிரே சைக்கிளில் வந்திருந்த மூன்று குழந்தைகள் அடிப்பட்டிருந்தார்கள். அதன்பிறகு நான் மயக்கமாகிவிட்டேன். விழித்து பார்த்தபோது நான் காரில் அமர்ந்திருந்தேன். நாங்கள் வந்த காரை யாரோ ஓட்டுநர் ஓட்டினர். எனக்கு தற்போது யார் என்று நினைவில்லை என பிறழ் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது இவ்வழக்கு சம்மந்தமான எந்த விவரமும் எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரியாது என்றால் சரிதான் என்றும், இவ்விபத்தில் யார் யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மயக்க நிலையில் இருந்தேன் என்றும், வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

15. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய எதிரியுடன் பயணித்த நபரான அ.சா.11 அரவிந்த் தனது சாட்சியத்தில் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் சந்தோஷ், நான், இளவரசன், கௌதம், அரவிந்த் ஆகிய ஐவரும்

ஏலகிரி செல்வதற்காக காலை 08.00 மணியளவில் காரில் வேலூரிலிருந்து சென்றோம். பள்ளிகொண்டா தாண்டியதும் நான் தூங்கி விட்டேன். கார் உருண்ட சத்தம் கேட்டது. எனக்கு இடது நெற்றியில் அடிப்பட்டது. அதனால் மயக்கம் ஏற்பட்டது. பின் நான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது காவல் நிலையத்தில் இருந்தேன் என பிறழ் சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது இவ்வழக்கு சம்மந்தமான எந்த விவரமும் எனக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தெரியாது என்றால் சரிதான் என்றும், இவ்விபத்தில் யார் யாருக்கு அடிப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் மயக்க நிலையில் இருந்தேன் என்றும், போலிசார் சொன்னதின்பேரில் தான் அங்கு 3 குழந்தைகள் இறந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான் என்றும், அந்த காரை ஓட்டிய ஓட்டுநர் நான் மயக்கம் தெளிந்து பார்த்தபோது அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான் என்றும், வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். என பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

16. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய எதிரியுடன் பயணித்த நபரான அ.சா.12 கௌதமன் தனது சாட்சியத்தில் பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் 2023ம் வருடத்தில் நான், அரவிந்த், சந்தோஷ், இளவரசன், ராகுல் ஆகியோர் காரில் ஏலகிரி செல்வதற்காக ஓட்டுநர் ஒருவர் ஓட்ட (ஓட்டுநர் பெயர் நினைவில்லை.) சென்று கொண்டிருந்தபோது காலை நேரத்தில் வேலூரில் கிளம்பினோம். பள்ளிக்கொண்டா தாண்டியதும் நான் தூங்கி விட்டேன். அதன்பிறகு திடீரென்று சத்தம் கேட்டது. நான் மயக்கமாகிவிட்டேன். பிறகு வாணியம்பாடி அருகே கார் கவிழ்ந்துவிட்டது என்று சொன்னார்கள். வெளியே 3 பள்ளி மாணவர்கள் அடிப்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிறகு போலிசார் எங்களை அழைத்து சென்றார்கள். என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

17. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய எதிரியுடன் பயணித்த நபரான அ.சா.11 அரவிந்த் தனது சாட்சியத்தில் பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் 2023ம்

வருடத்தில் நான், சந்தோஷ், கௌதம், இளவரசன், ராகுல் ஆகியோர் காரில் ஏலகிரி செல்வதற்காக ஓட்டுநர் ஒருவர் ஓட்ட (ஓட்டுநர் பெயர் நினைவில்லை.) சென்று கொண்டிருந்தபோது காலை நேரத்தில் வேலூரில் கிளம்பினோம். பள்ளிக்கொண்டா தாண்டியதும் நான் தூங்கி விட்டேன். அதன்பிறகு கார் கவிழ்ந்த பிறகு விழிப்பு வந்தது. அந்த இடம் வாணியம்பாடி என்று சொன்னார்கள். வெளியே 3 பள்ளி மாணவர்கள் அடிப்பட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள். பிறகு போலிசார் எங்களை அழைத்து சென்றார்கள்.

18. பிரேத விசாரணை சாட்சிகளான அ.சா.5 ராகுல், அ.சா.6 சாமுவேல் மற்றும் அ.சா.7 முசம்மில் தங்களது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2023 ம் வருடத்தில் தேதி நினைவில்லை 11 வது மாதம் மதியம் 01.00 மணிக் மேல் தேசிய நெடுஞ்சாலையில் TVS இருசக்கர வாகனத்தில் சென்ற போது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிந்து வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். தலையில் அடிப்பட்டு இறந்திருந்தார். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின்போது, **" யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. "** சாட்சியம் அளித்துள்ளார்.

19. இவ்வழக்கின் பிரேத விசாரணை சாட்சிகளான அ.சா.7 முசம்மில், அ.சா.8 சனாசுல்தானா, அ.சா.9 மீனாட்சி, அ.சா.10 முருகன், அ.சா.13 மேரி, அ.சா.14 சதீஸ், அ.சா.15 சுஜிதா, அ.சா.16 அமுதா, அ.சா.17 வினோத் ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற விசாரணையின்போது, சம்பவத்தை குறித்து கேள்விப்பட்டு வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று இறப்புற்ற மூவரையும் பார்த்ததாக சாட்சியமளித்துள்ளனர்.

20. இவ்வழக்கின் மற்றொரு பிரேத விசாரணை சாட்சியான அ.சா.6 சாமுவேல் அவரது சாட்சியத்தில் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு 10 நிமிடத்தில் சம்பவயிடம் சென்று பார்த்தபோது பிள்ளைகள் மூவரும் பலத்த அடிப்பட்டு சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டதாகவும், ஆம்புலன்ஸ் மூலம் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு

எடுத்து சென்றார்கள் என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது விபத்து நடந்ததாக சொல்லபடும் இடத்தில் நான் செல்லும் போது யார் யார் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என் மகன் இறந்த பதடத்தில் இருந்தேன் என்றும், கார் விபத்து நடந்ததாக சொல்லபடும் காரை யார் ஓட்டி வந்தார்கள், என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

21. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.18 பாஸ்கர் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 28.02.2023ம் தேதி திருப்பத்தூரிலிருந்து ஆம்பூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சாமி & கோ ஷீ கம்பெனி அருகே கார் ஒன்று அதன் செல்லும் வழியில் இருந்து ரோடு மாறி வந்து சைக்கிளில் சென்ற மாணவர்கள் மோதி விபத்தானது. அந்த விபத்தில் மூன்று மாணவர்களும் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். போலிசார் அங்கு வந்து பார்த்து விட்டு எழுதி என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது என்னிடம் காட்டடப்பட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார்.

22. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.21 விக்ரம், கிராம நிர்வாக அலுவலர், தனது நீதிமன்ற விசாரணையின்போது, " ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 28.02.2023 அன்று வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் இருந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அன்று காலை 08.45 மணிக்கு வளையாம்பட்டு கிராமம், சாமி அன் கோ லெதர் டேனரி அருகில் சர்வீஸ் ரோட்டில் விபத்தை ஏற்படுத்தி எதிரி சந்தோஷ் என்பவர் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் சரண் அடைந்ததால் என்னையும் எனது உதவியாளரையும் சாட்சிகளாக இருக்கவேண்டும் என கேட்டுக்கொண்டதின் பேரில் நானும் எனது உதவியாளர் சுமதியும் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கு அன்று மாலை சுமார் 04.15 மணியில் இருந்து 04.30 மணிக்குள் சென்றோம். காவல் நிலையத்தில் எதிரி சந்தோஷ் என்பவரிடம் மாலை 04.30 மணி

முதல் 05.15 வரை எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடைய உதவியாளர் சுமதியும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். மேற்படி சந்தோஷ் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் பின்வருமாறு. என்னுடைய பெயர் சந்தோஷ், என்னுடைய தந்தை பெயர் வெங்கடேஷ் என்னுடைய தாயார் பெயர் ஈஸ்வரி, என்னுடைய சகோதரர் பெயர் சஞ்சய். நான் இந்து போயர் இனத்தை சார்ந்தவன், நான் வி.ஐ.டி பல்கலைகழகத்தில் B.Sc. computer science மூன்றாம்ஆண்டு படித்துவருகிறேன். நானும் அதே கல்லூரியில் மூன்றாம் ஆண்டு B.Sc. computer science பயின்று வரும் ராகுல், இளவரசன், அரவிந்த் மற்றும் இரண்டாம் ஆண்டு B.Sc. computer science பயின்று வரும் கௌதம் ஆகியோர் சேர்ந்து ஏலகிரி மலை சுற்றுலா செல்ல திட்டமிட்டோம். அதன் படி 28.02.2023 அன்று காலை 07.00 மணிக்கு வேலூரில் இருந்து MIYLES KA 03 AF0194 என்ற பதிவெண் கொண்ட சிகப்பு நிற மகேந்திரா TUV 300 என்ற வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்டர்லைனில் நான் காரை இயக்கினேன். சுமார் காலை 08.45 மணியளவில் வாணியம்பாடி வட்டம், கிரிசமுத்திரம் நெடுஞ்சாலையை ஒட்டி சிறிது தூரம் உள்ள சாலையில் செல்லும்போது எனக்கும் முன் ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனம் சென்றதால் காரை வலது புற லைனில் செலுத்தினேன். அங்கு லாரியை பார்த்ததும் இடது புறமாக காரை செலுத்தும் போது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் இருந்ததால் காரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதன் விளைவாக காரானது சாலையின் இடது புறம் உள்ள தடுப்பு சுவரின் மீது மோதி இடது புற சர்வீஸ் ரோட்டில் இரண்டு சைக்கிளில் பள்ளிக்கு சென்றுக்கொண்டிருந்த மூன்று மாணவர்கள் மீது மோதி மரத்தின் மீது மோதியது. உடனே நான் காரில் இருந்து இறங்கி சென்று பார்த்த போது மூன்று மாணவர்களும் சம்பவயிடத்திலே உயிர் இறந்திருந்தனர். நான் அங்கிருந்து பயந்து வாணியம்பாடி பஸ் நிலையத்திற்கு வந்து விட்டேன். பின்னர் அங்கிருந்து வந்து வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கு சென்று ஆஜர்ஆகிவிட்டேன். அங்கு வாணியம்பாடி போலிசார் என்னை கைது செய்தனர். மேலும் என்னை அழைத்து சென்றால் சம்பவம் நடந்த இடத்தையும்

வாகனத்தையும் அடையாளம் காட்டுவேன் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். " என சாட்சியம் அளித்துள்ளார்.

23. மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.22 சுமதி, கிராம நிர்வாக உதவியாளர் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 28.02.2023 ம் தேதி, ஒரு வாரம் வளையாம்பட்டு கிராமத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். அன்று காலை 08.45 மணியளவில் வளையாம்பட்டு தேசிய நெடுஞ்சாலையில் சி.கோ. டேனரி அருகில் கார் ஒன்று சைக்கிளில் வந்த மூன்று பசங்க மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து சுமார் 10 நிமிடத்திற்குள் சம்பவயிடம் சென்றேன். அங்கு சிவப்பு நிற கார் ஒன்று மரத்தில் மோதி இருந்தது. பசங்க மூன்று பேரும் இறந்து கிடந்தார்கள். அவருக்கு ஏற்பட்ட காயங்களை நான் கவனிக்கவில்லை. பின்னிட்டு அங்கு போலிசார் வந்து இறந்து கிடந்த குழந்தைகளை எடுத்துச்சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை 28.02.2023 ம் தேதி, வாணியம்பாடி காவல் நிலையத்தில் போலிசார் என்னிடம் வாக்குமூலம் கேட்டு எழுதிக்கொண்டார்கள், அதில் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள். " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் தெரியாது என்றும், நான் சம்பவயிடம் சென்ற போது போலிசார் என்னிடம் பெயர், முகவரி, நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்ற விவரங்களை குறிப்பெடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான் என்றும், அந்த குறிப்பில் சம்பவயிடத்திலே ஒரு கையொப்பம் செய்ய சொன்னார்கள் என்றால் சரிதான் என்றும், அந்த கையெழுத்து தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டியது என்றால் சரிதான் என்றும், காவல் நிலையத்திற்கு நானும் அ.சா.21ம் போலிசார் அழைத்ததின் பேரில் தான் சென்றோம் என்றால் சரிதான் என்றும், நாங்கள் சென்ற போது காவல் நிலையத்தில் என்ன நடந்தது யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், நான் போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் அ.சா.21 கேட்டுக்கொண்டதன்

அடிப்படையிலும் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான் என்றும், நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும், நான் முதன்மை விசாரணையில் கூறிய தகவல்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையிலும் அ.சா.21 சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையிலும் தான் கூறினேன் என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

23. இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.26 அருண்குமார், காவல் ஆய்வாளர், அவரது சாட்சியத்தில், அ.சா. 1 ராஜி கொடுத்த அ.சா.ஆ.1 புகார்மனுவை பெற்று அதற்கேற்ப அ.சா.ஆ.8 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், அ.சா.27, காவல் துணைக் கண்காணிப்பாளரின் உத்தரவின் பேரில் விஜய் என்பவரின் பிரேதத்தின் மீது அ.சா.ஆ.9 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததை குறித்தும், அ.சா.27, காவல் துணைக்கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்த வழக்கை அ.சா.27, காவல் துணைக்கண்காணிப்பாளர் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்து, இறந்துபோன சூர்யா என்பவரின் பிரேதத்தின் மீது அ.சா.ஆ.11 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததை குறித்தும், தனது உத்தரவின் பேரில் அ.சா.25 நாகராஜன், வாணியம்பாடி நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறப்புற்ற ரபீக் என்பவரின் பிரேதத்தின் மீது அ.சா.ஆ.7 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததை குறித்தும், அனைத்து சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றதை குறித்தும், விஜய் என்பவரின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு தலைமைக் காவலர் 294 அ.சா.23 திரு.மூர்த்தி என்பவர் மூலமும், சூர்யா என்பவரின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு தலைமை காவலர் 250 அ.சா.24 திரு. சரவணன் என்பவர் மூலமும், ரபீக் என்பவரின் இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு முதல் நிலை காவலர் 435 திரு. மனோகரன் என்பவர் மூலமும் சடல கூராய்வு செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தை அனுப்பி வைத்ததை குறித்தும், எதிரியை கைது செய்து தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தை அ.சா.21 விக்ரம், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அ.சா.22 சுமதி, கிராம நிர்வாக உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து எதிரியை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும், இறப்புற்ற ரபீக்கின் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்த மருத்துவர் திரு. கணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.3 சடலக்கூராய்வு அறிக்கை பெற்றதை குறித்தும், இறப்புற்ற சூர்யா, விஜய் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்த மருத்துவர் திருமதி. சத்தியபாக்கியலட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 சடலக்கூராய்வு அறிக்கைகள் பெற்றதை குறித்தும், விபத்தை ஏற்படுத்திய வாகனமான KA 03 AF 0194 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா TUV 300 வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.வெங்கட்ராகவன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அ.சா.ஆ.12 ஆய்வறிக்கை பெற்றதைக் குறித்தும், புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள்.

24. இவ்வழக்கில் எதிரியின் மீது இ.த.ச. பிரிவு 279, 304(A) (3 Count) –ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. மேற்படி குற்றச்சாட்டுகளின் கீழ் எதிரியை குற்றவாளி என நிரூபிக்க வேண்டுமானால், அரசு தரப்பில் எதிரியே சம்பவ நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட வாகனத்தை ஓட்டிச் சென்றார் என்பதும், அவ்வாறு வாகனத்தை ஓட்டிச் சென்றபோது அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையிலும் வாகனத்தை இயக்கினார் என்பதும், அதன் விளைவாக விபத்து ஏற்பட்டு மூன்று நபர்களின் மரணம் நிகழ்ந்தது என்பதும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்.

**இ.த.ச. பிரிவு 279**–ன் கீழ் குற்றத்தை நிரூபிக்க வேண்டுமானால், கீழ்கண்ட முக்கிய குற்றக்கூறுகள் நிரூபிக்கப்பட்டிருக்க வேண்டும்:–

(i) எதிரியே குற்றஞ்சாட்டப்பட்ட வாகனத்தை ஓட்டியிருக்க வேண்டும்.

(ii) அவ்வாறு வாகனத்தை பொது சாலையில் ஓட்டியபோது

அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், மனித உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையிலும் வாகனத்தை இயக்கியிருக்க வேண்டும் மற்றும்

(iii) மேற்படி அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதல் குற்றச்சாட்டிற்குரிய விபத்துடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

அதேபோன்று, **இ.த.ச. பிரிவு 304(A)–ன்** கீழ் குற்றத்தை நிரூபிக்க வேண்டுமானால், எதிரியின் அஜாக்கிரதையான அல்லது கவனக்குறைவான செயல் காரணமாகவே சம்பந்தப்பட்ட நபரின் மரணம் ஏற்பட்டது என்பதும், எதிரியின் செயல் மற்றும் ஏற்பட்ட மரணம் ஆகியவற்றிற்கு நேரடியான காரணத் தொடர்பு இருப்பதும் அரசு தரப்பால் நிரூபிக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் மூன்று நபர்கள் இறந்துள்ளதால், ஒவ்வொரு 304(A) குற்றச்சாட்டிற்கும் சம்பந்தப்பட்ட நபரின் மரணம் எதிரியின் அஜாக்கிரத்தையான அல்லது கவனக்குறைவான செயல் காரணமாகவே ஏற்பட்டது என்பதும் நிரூபிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வழக்கைப் பொறுத்தவரையில், அ.சா.1 ராஜி தனது சாட்சியத்தில் விபத்து யாருடைய தவறினால் ஏற்பட்டது, எந்த தவறினால் ஏற்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்றும், விபத்தை ஏற்படுத்திய காரை யார் ஓட்டி வந்தார் என்பதும் தனக்குத் தெரியாது என்றும் தெரிவித்துள்ளார். எனவே, அ.சா.1–ன் சாட்சியம் விபத்து மற்றும் மூன்று நபர்களின் மரணத்தை உறுதி செய்யக்கூடியதாக இருந்தாலும், எதிரியே வாகனத்தை ஓட்டினார் என்பதையோ, எதிரியின் அஜாக்கிரதையான ஓட்டுதலே விபத்திற்குக் காரணம் என்பதையோ நிரூபிக்கக்கூடிய நேரடி சாட்சியமாக அமையவில்லை. இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 ராஜா தனது சாட்சியத்தில், விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்பதை தான் கவனிக்கவில்லை என்றும், மேலும், வாகனம் வேகமாக வந்தது என்பதனை, தடுப்பு சுவரை மீறி சர்வீஸ் சாலைக்கு வந்து விபத்தை ஏற்படுத்தியதன் அடிப்படையில் கூறுவதாக சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.2 விபத்து நடைபெற்ற விதம் குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும், எதிரியே அந்த வாகனத்தை ஓட்டினார் என்பதற்கு நேரடி

ஆதாரமாக அவரது சாட்சியம் அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோன்று, அ.சா.3 சரவணன் தனது சாட்சியத்தில், காரை யார் ஓட்டி வந்தார்கள் என்பது தனக்குத் தெரியாது என்றும், விபத்து எந்தத் தவறினால் நடைபெற்றது என்பதை தன்னால் சொல்ல முடியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், காரில் எத்தனை நபர்கள் பயணித்தனர் என்பதும் தனக்குத் தெரியாது என தெரிவித்துள்ளார். எனவே, அ.சா.3–ன் சாட்சியமும் விபத்து நிகழ்ந்ததை உறுதி செய்தாலும், எதிரியின் ஓட்டுநர் அடையாளத்தையும், எதிரியின் குறிப்பிட்ட அஜாக்கிரதையான செயலையும் உறுதியாக நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.28 ராஜ்குமார் தனது முதன்மை சாட்சியத்தில், விபத்து ஏற்படுத்திய வாகனத்திலிருந்து ஓட்டுநர் இறங்கியதாகவும், அந்நபர் தனது பெயர் சந்தோஷ் எனக் கூறியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், குறுக்கு விசாரணையில், வாகனம் ஓடிக்கொண்டிருந்தபோது யார் அந்த வாகனத்தை ஓட்டினார்கள் என்பது தனக்குத் தெரியாது என்றும், வாகனம் நின்றபோது தான் ஓட்டுநர் இருக்கையிலிருந்து இறங்கிய நபரை பார்த்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், விபத்து எதனால், யாருடைய தவறினால் ஏற்பட்டது என்பது தனக்குத் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே, அ.சா.28–ன் சாட்சியத்திலும் சம்பவ நேரத்தில் எதிரியே வாகனத்தை ஓட்டினார் என்பதற்கு தெளிவான மற்றும் சந்தேகத்திற்கு இடமற்ற நிரூபணம் ஏற்படவில்லை.

25. மேலும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் பயணித்ததாகக் கூறப்படும் அ.சா.4 இளவரசன், அ.சா.11 அரவிந்த் மற்றும் அ.சா.12 கௌதமன் ஆகியோரின் சாட்சியங்களையும் இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலிக்கிறது. அ.சா.4 தனது சாட்சியத்தில் விபத்து ஏற்பட்டபோது தான் மயக்க நிலையில் இருந்ததாகவும், வாகனத்தை யார் ஓட்டினார் என்பது தற்போது நினைவில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். அ.சா.11–ம் விபத்திற்குப் பின்னர் தான் மயக்கத்திலிருந்து தெளிந்ததாகவும், தான் பார்த்தபோது ஓட்டுநர் அங்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார். அ.சா.12 தனது சாட்சியத்தில் ஓட்டுநர் ஒருவர் வாகனத்தை

ஓட்டியதாகவும், அந்த ஓட்டுநரின் பெயர் நினைவில் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, எதிரியுடன் பயணித்ததாகக் கூறப்படும் சாட்சிகளின் சாட்சியங்களிலும் எதிரியே சம்பவ நேரத்தில் வாகனத்தை ஓட்டினார் என்பதை நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

25(i). மேலும், இவர்கள் அ.சா.4 இளவரசன், அ.சா.11 அரவிந்த் மற்றும் அ.சா.12 கௌதமன் காரில் உடன் பயணித்த சாட்சிகள் என்பதாலும், மேலும் எதிரியின் உடைய நண்பர்கள் என்பதாலும், அவரைக் காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறார்கள் என்ற அனுமானத்தை (Conjecture & Surmise) மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றம் முடிவுக்கு வரமுடியாது. மேலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளின் படி " எவ்வளவு பலமான சந்தேகமாக இருந்தாலும், அது சட்டப்பூர்வ ஆதாரத்திற்கு இணையாகாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

26. அரசுத் தரப்பின் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.21 விக்ரம், எதிரி சந்தோஷ் காவல் நிலையத்தில் சரணடைந்ததாகவும், அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும், அதில் எதிரி தான் வாகனத்தை ஓட்டியதாகவும், அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் வாகனத்தை இயக்கியதால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் மூன்று மாணவர்கள் மீது மோதியதாகவும் கூறியிருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், மற்றொரு ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.22 சுமதி குறுக்கு விசாரணையில், தான் கையொப்பமிட்ட ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது தனக்குத் தெரியாது என்றும், காவல்துறையினர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும், அ.சா.21 கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் தான் கையொப்பமிட்டதாகவும், முதன்மை விசாரணையில் தான் கூறிய தகவல்கள் காவல்துறையினர் மற்றும் அ.சா.21 சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் கூறியவை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆகையால், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் நம்பகத்தன்மை குறித்து எழும் சந்தேகத்தின் காரணமாக,

அதனை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு எதிரியின் குற்றத்தை நிரூபிக்கப்பட்டதாகக் கொள்ள இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

27. இவ்வழக்கில் மூன்று மாணவர்கள் விபத்தில் இறந்துள்ளனர் என்பதில் அரசு தரப்பின் சாட்சியங்களால் நிரூபணம் உள்ளது. இருப்பினும், மரணம் ஏற்பட்டுள்ளது என்பது மட்டும் இ.த.ச. பிரிவு 304(A)–ன் கீழ் எதிரியை குற்றவாளி என நிரூபிக்க போதுமானதல்ல. அந்த மரணங்கள் எதிரியே வாகனத்தை ஓட்டியதும், அவர் அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் வாகனத்தை ஓட்டியதன் நேரடி விளைவாகவே ஏற்பட்டன என்பதும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் மூன்று கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 மற்றும் அ.சா.28 ஆகியோரின் சாட்சியங்களையும், வாகனத்தில் பயணித்த அ.சா.4, அ.சா.11 மற்றும் அ.சா.12 ஆகியோரின் சாட்சியங்களையும் ஒட்டுமொத்தமாக பரிசீலிக்கும் போது, விபத்து ஏற்பட்டது மற்றும் மூன்று நபர்கள் இறந்தனர் என்பது தெளிவாகின்றது. ஆனால், சம்பவ நேரத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட வாகனத்தை எதிரியே ஓட்டினார் என்பதும், எதிரியின் குறிப்பிட்ட அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலே விபத்திற்கும் அதன் விளைவாக ஏற்பட்ட மூன்று மரணங்களுக்கும் காரணம் என்பதும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை.

28. எனவே, இவ்வழக்கில் இ.த.ச. பிரிவு 279–ன் கீழ் குற்றத்தை நிரூபிக்க வேண்டிய முக்கிய கூறுகளான எதிரியின் ஓட்டுநர் அடையாளமும், எதிரியின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலும் அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோன்று, இ.த.ச. பிரிவு 304(A)–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள மூன்று எண்ணிக்கையிலான குற்றச்சாட்டுகளைப் பொறுத்தவரையில், மூன்று நபர்களின் மரணம் நிகழ்ந்தது நிரூபிக்கப்பட்டிருந்தாலும், அந்த மூன்று மரணங்களும் எதிரியின் அஜாக்கிரதையான மற்றும் கவனக்குறைவான ஓட்டுதலின் நேரடி விளைவாகவே ஏற்பட்டன என்பதும்,

சம்பவ நேரத்தில் எதிரியே வாகனத்தை ஓட்டினார் என்பதும் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை. எனவே, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.22 மற்றும் அ.சா.28 ஆகியோரின் சாட்சியங்கள் மூலம் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் வாகனத்தை விபத்து சமயத்தில் ஓட்டி வந்தார் என்பதனையும், விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லப்படும் காரை எதிரிதான் அதிகவேமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாக ஓட்டி சென்று இறப்புற்ற மூவரின் மீதும் மோதி இறப்பை ஏற்படுத்தியுள்ளார் என்பதனை சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. எனவே, விசாரணை அதிகாரிகளின் சாட்சியங்களை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டை தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் கருதுவதாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 304(A) (3 Count) ன் கீழான சுமத்தப்பட்ட குற்றம் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சணைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

29. <u>**முடிவாக**</u> இவ்வழக்கில் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) (3 Count)–ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

30. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எதிரி கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 10 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| வ. எண் | அரசு தரப்பு சாட்சி எண் | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.ராஜி | வழக்கின் வாதி |
| 2. | அ.சா.2 | திரு.ராஜா | கண்ணுற்ற சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.சரவணன் | கண்ணுற்ற சாட்சி |
| 4. | அ.சா.4 | திரு.இளவரசன் | கண்ணுற்ற சாட்சி |
| 5. | அ.சா.5 | திரு.ராகுல் | கண்ணுற்ற சாட்சி |
| 6. | அ.சா.6 | திரு.சாமுவேல் | பிரேத விசாரணை சாட்சி |
| 7. | அ.சா.7 | திரு.முசம்மில் | பிரேத விசாரணை சாட்சி |
| 8. | அ.சா.8 | திருமதி.சனாசுல்தானா | பிரேத விசாரணை சாட்சி |
| 9. | அ.சா.9 | திருமதி.மீனாட்சி | பிரேத விசாரணை சாட்சி |
| 10. | அ.சா.10 | திரு.முருகன் | பிரேத விசாரணை சாட்சி |
| 11. | அ.சா.11 | திரு.அரவிந்த் | கண்ணுற்ற சாட்சி |
| 12. | அ.சா.12 | திரு.கௌதமன் | கண்ணுற்ற சாட்சி |
| 13. | அ.சா.13 | திருமதி.மேரி | பிரேத விசாரணை சாட்சி |
| 14. | அ.சா.14 | திரு.சதீஸ் | பிரேத விசாரணை சாட்சி |
| 15. | அ.சா.15 | திருமதி.சுஜிதா | பிரேத விசாரணை சாட்சி |
| 16. | அ.சா.16 | திருமதி.அமுதா | பிரேத விசாரணை சாட்சி |
| 17. | அ.சா.17 | திரு.வினோத் | பிரேத விசாரணை சாட்சி |
| 18. | அ.சா.18 | திரு.பாஸ்கர் | பார்வை மகசர் சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 19. | அ.சா.19 | திரு.கணேஷ், மருத்துவர் | மருத்துவ சாட்சி |
| 20. | அ.சா.20 | திரு.சத்தியபாக்கிலட்சுமி, முதன்மை மருத்துவர் | மருத்துவ சாட்சி |
| 21. | அ.சா.21 | திரு.விக்ரம், கிராம் நிர்வாக அலுவலர் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| 22. | அ.சா.22 | திருமதி.சுமதி, கிராம் நிர்வாக உதவியாளர். | ஒப்புதல் வாக்குமூல சாட்சி |
| 23. | அ.சா.23 | திரு.மூர்த்தி, தலைமை காவலர் | மருத்துவ பரிசோதனைக்கு உடன் இருந்தவர் |
| 24. | அ.சா.24 | திரு.சரவணன், தலைமை காவலர். | மருத்துவ பரிசோதனைக்கு உடன் இருந்தவர் |
| 25. | அ.சா.25 | திரு.நாகராஜன், காவல் ஆய்வாளர் | பிரேத விசாரணை செய்த காவல் ஆய்வாளர். |
| 26. | அ.சா.26 | திரு.அருண்குமார், காவல் ஆய்வாளர். | புலன் விசாரணை அதிகாரி |
| 27. | அ.சா.27 | திரு.நிலவழகன், காவல் துணை கண்காணிப்பாளர் | புலன் விசாரணை அதிகாரி |
| 28. | அ.சா.28 | திரு.ராஜ்குமார், | கண்ணுற்ற சாட்சி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| வ. எண் | ஆவணத்தின் எண் | ஆவணங்களின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 28.02.2023 ம் தேதியிட்ட புகார் மனு. | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| 2 | அ.சா.ஆ.2 | 28.02.2023 ம் தேதியிட்ட பார்வை மகசர் | அ.சா.18 |
| 3 | அ.சா.ஆ.3 | 28.02.2023ம் தேதியிட்ட ரபீக் என்பவரின் சடலக்கூறாய்வு அறிக்கை. | அ.சா.20 |
| 4 | அ.சா.ஆ.4 | 28.02.2023ம் தேதியிட்ட சூர்யா என்பவரின் சடலக்கூறாய்வு அறிக்கை. | அ.சா.20 |
| 5 | அ.சா.ஆ.5 | 28.02.2023ம் தேதியிட்ட விஜய் என்பவரின் சடலக்கூறாய்வு அறிக்கை. | அ.சா.20 |
| 6 | அ.சா.ஆ.6 | 28.02.2023ம் தேதியிட்ட சந்தோஷ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம். | அ.சா.21 |
| 7 | அ.சா.ஆ.7 | 28.02.2023ம் தேதியிட்ட ரபீக் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா.25 |
| 8. | அ.சா.ஆ.8 | 28.02.2023ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.26 |
| 9. | அ.சா.ஆ.9 | 28.02.2023ம் தேதியிட்ட விஜய் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா.26 |
| 10. | அ.சா.ஆ.10 | 28.02.2023ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் | அ.சா.27 |
| 11. | அ.சா.ஆ.11 | 28.02.2023ம் தேதியிட்ட சூர்யா என்பவரின் பிரேத விசாரணை அறிக்கை. | அ.சா.27 |
| 12. | அ.சா.ஆ.12 | 17.03.2023ம் தேதியிட்ட KA 03 AF 0194 என்ற விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஆய்வறிக்கை. | அ.சா.27 |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா. ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.